# சில வரிச் செய்திகள்!

## 6 கோடி பேர் வருமான வரி தாக்கல் செய்துள்ளனர்!

### வருமான வரித்துறை அறிவிப்பு!

புதுடெல்லி, ஆக. 1 -

மத்திய வருமான வரித் துறை நேற்று முன்தினம் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் கூறியுள்ளதாவது:

2022-23 மதிப்பீட்டு ஆண்டு வருமான வரி தாக்கலுக்கு கடைசி நாள் ஜுலை 31ந்தேதி ஆகும். நேற்று முன்தினம் மாலை 6.30 மணி வரை சுமார் 6 கோடி பேர் வருமான வரி தாக்கல் செய்திருந்தனர். கடந்த ஆண்டைவிட அதிகமானோர் தாக்கல் செய்துள்ளார்கள். நேற்று முன்தினம் மட்டும் சுமார் 26 லட்சத்துக்கும் அதிகமானோர் வருமான வரி தாக்கல் செய்துள்ளனர். வருமான வரி தாக்கல் செய்வோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இதற்காக வரி செலுத்துவோருக்கு நன்றி தெரிவிக்கிறோம் என பதிவிட்டுள்ளது.

## தக்காளி விற்பனை செய்து 45 நாட்களில் ரூ.4 கோடி சம்பாதித்த ஆந்திர விவசாயி!

சித்தூர், ஆக. 1 -

ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி முரளி (வயது 48). கூட்டுக்குடும்பமாக வசிக்கும் இவருக்கு கர்காமண்டலா கிராமத்தில் 22 ஏக்கர் நிலம் உள்ளது. தக்காளி விவசாயத்தில் அதிக லாபம் அடைந்தது குறித்து விவசாயி முரளி கூறியதாவது:

கடந்த 8 ஆண்டுகளாக தக்காளி விவசாயத்தில் ஈடுபட்டுள்ளேன். கடந்தாண்டு ஜுலை மாதத்தில் தக்காளி விலை வீழ்ச்சியால் எனக்கு ரூ.1.5 கோடி கடன் ஏற்பட்டது. அடிக்கடி மின்தடையால் விளைச்சலும் சரியாக இல்லை.

ஆனால் இந்தாண்டு எனக்கு அதிர்ஷ்ட காற்று வீசியது. எனது நிலத்தில் விளைச்சலும் அமோகமாக இருந்தது. இதுவரை 35 முறை அறுவடை செய்துவிட்டேன். எனது வயலில் இன்னும் 15 முதல் 20 முறை தக்காளி அறுவடை செய்யலாம். தக்காளிக்கு கோலார் வேளாண் சந்தையில் நல்ல விலை கிடைப்பதால், 130 கி.மீ. தூரம் பயணம் செய்து தக்காளியை விற்பனை செய்கிறேன். கடந்த 45 நாளில் ரூ.4 கோடிக்கு தக்காளியை விற்பனை செய்தேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு

### 35 பேர் பலி! 150 பேர் படுகாயம்!



கராச்சி, ஆக 1 -

பாகிஸ்தானில் நிகழ்ந்த பயங்கர குண்டு வெடிப்பு சம்பவத்தில் 35 பேர் உயிரிழந்தனர். பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா மாகாணத்தில் உள்ள பஜார் மாவட்டத்தில் இஸ்லாமிய அரசியல் கட்சி கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஜே.யு.ஐ.எப். அமைப்பு சார்பில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அங்கே எதிர்பாராதவிதமாக திடீரென குண்டுவெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த பயங்கர குண்டுவெடிப்பில் குறைந்தது 35 பேர் உயிரிழந்தனர் என்றும், 150 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் காயமடைந்தவர்கள், பெஷாவர் மற்றும் டைமர்கெராவில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தார்.

மனித வெடிகுண்டு மூலம் குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்திருக்கலாம் என அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்த சம்பவம் குறித்து அங்குள்ள அதிகாரிகள் விசாரணை நடத்திவருகின்றனர். இந்த குண்டுவெடிப்பு சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இந்தியாவில் 3 ஆண்டுகளில் 13 லட்சம் பெண்கள் மாயம்!

புதுடெல்லி, ஆக. 1 -

18 வயதுக்கு மேற்பட்ட 10.61 லட்சம் பெண்கள் காணாமல் போயுள்ளனர் என ஒன்றிய அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய குற்ற ஆவணம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நம் நாட்டில் பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் காணாமல் போவது அதிகரித்து வருகிறது. கடந்த, 2019 21ம் ஆண்டுகளில் மட்டும் நாடு முழுதும் 18 வயதுக்கு மேற்பட்ட 10.61 லட்சம் பெண்கள் காணாமல் போயுள்ளனர். இதில் 2021ல் மட்டும் 3.75 லட்சம் பெண்கள் மாயமாகி உள்ளனர். இந்த காலகட்டத்தில் 18 வயதுக்கும் கீழ் உள்ள 2.51 லட்சம் சிறுமியர் காணாமல் போயுள்ளனர்.

இவற்றில் மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 57 ஆயிரம் பெண்கள் மாயமாகி உள்ளனர். யூனியன் பிரதேசங்களில் தலைநகர் டெல்லியில் தான் அதிக அளவில் பெண்களும் சிறுமிகளும் காணாமல் போயுள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தின் 12 இடங்களில் 100 டிகிரி வெப்பம்!



சென்னை, ஆக. 1 -

தமிழகத்தின் 12 இடங்களில் வெப்பம் 100 டிகிரி பாரன் ஹீட்டை தாண்டி பதிவாகியுள்ளது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றும், நாளையும் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்து உள்ளது. அதே வேளையில் தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. அதன்படி, நேற்று முன்தினம் 12 இடங்களில் வெப்பம் 100 டிகிரி பாரன்ஹீட்டை தாண்டி பதிவாகியுள்ளது.

அதாவது, மதுரை நகரம், மதுரை விமான நிலையம், கடலூர், நாகை, திருச்சி , கரூர் பரமத்தி , அதிராமபட்டினம் , காரைக்கால், திருத்தணி, சென்னை, பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் வெப்பம் 100 டிகிரி பாரன்ஹீட்டை தொட்டுள்ளது. மேலும், தமிழகத்தில் இன்று இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியல் வெப்பம் அதிகரிக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.



திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், சூரியநல்லூர் ஊராட்சி, வேங்கிபாளையம் அங்கன்வாடி மையம், கண்ணாங்கோவில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் விண்ணப்பம் பதிவு மையத்தினைஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆய்வு செய்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், குண்டடம் ஒன்றிய கழக செயலாளர்கள் சு.சந்திரசேகரன், சிவ.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன், பேரூர் கழகச் செயலாளர் அன்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும்

## முதல்வர் தலைமையிலான கூட்டணி வெற்றி பெறுவது உறுதி!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேச்சு!

திண்டிவனம், ஆக. 1 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் செயல் வீரர்கள் கூட்டம் வெள்ளி மேடு பேட்டையில் நடைபெற்றது.

ஒன்றிய அவைத் தலைவர் அமராவதி தலைமை தாங்கினார். ஒன்றிய நிர்வாகிகள் சுப்பிரமணி, ஆர். காளி, அன்பரசி ஜெயபிரகாஷ்,திருஞானசம்பந்தன், அரிகிருஷ்ணன், கே. காளி, மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய செயலாளர் ராஜாராம் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசியதாவது:

முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டு ஆண்டு காலத்தில் நூறாண்டுகள் செய்ய வேண்டிய பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்.

அந்த வகையில் 100 ஆண்டு காலம் தொலைநோக்கு சிந்தனையுடன் பள்ளி குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார். இந்தியாவை மீட்டெடுக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் உள்ள கூட்டணி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதுவை உட்பட 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவது உறுதி என தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான்,



இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் முதலமைச்சர் இரண்டு லட்சம் விவ சாயிகளுக்கு இலவச மின்சார திட்டத்தை வழங்கியுள்ளார். வெளிநாடுகளுக்கு சென்று முதலீட்டாளர்களை தமிழகத்திற்கு அழைத்து 2.50 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளார்.

ஆனால் ஒன்றியத்தில் உள்ள மோடி அரசு அதானிக்கும் அம்பானிக்கும் 12 லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்து விவசாயிகளுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் இந்தியாவில் விவசாயிகள் மீது அக்கறை கொண்ட ஒரு முதல மைச்சரை நாம் பெற்றிருப்பதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமைபட தெரிவித்தார்.

தொடர்ந்து ஒலக்கூர் மேற்கு ஒன்றிய தே.மு.தி.க. அவைத்தலைவர் எத்திராஜ் தலைமையில் ஆனந்தகுமார், அபிமன்னன், சேகர், பாலு, கண்ணன், ரஞ்சித், குமார், பாபு, கோவிந்தசாமி, அண்ணாதுரை, தண்டபாணி, பிரேம்குமார், கன்னியப்பன், சுப்பிரமணி, குமார், வெங்கடேசன் ,சிவலிங்கம், பூபாலன், தாஸ், குமரவேல் , சிட்டிபாபு உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட தே.மு.தி.க. நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி அமைச்சர் செஞ்சிமஸ்தான் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். தி.மு.க.வில் இணைந்த அனைத்து நிர்வாகிகளுக்கும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

இதையடுத்து ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம்,பொதுக் குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் மனோ சித்ரா ராஜேஸ்வரன், ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, அன்பரசி ஜெயப்ரகாஷ், விஜயபாஸ்கர், நிர்வாகிகள்பாலமுருகன், சேகர், அண்ணாதுரை, குமரவேலன், மாரிமுத்து, கார்த்திக், ராஜேந்திரன், பாலமுருகன், ஜெகன், பழனி, தேன்மொழி, பாண்டியன், சின்னையன், அசோகன், கண்ணன், சின்ன சாமி, பார்த்திபன், பவானி, சந்திரதேவி, கல்யாணி மாலதி கலியபெருமாள் முருகன், ரவிச்சந்திரன், இளைஞர் அணி மணிகண்டன்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ் நன்றி கூறினார்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சேலம் கிழக்கு மாவட்டச் சுற்றுச்சூழல் அணியின் சார்பாக சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் ஒரு லட்சத்து பதினோராயிரத்து நூற்றிபதின்னொன்று பனை விதைகளை நடுவதற்கு பனை விதைகள் சேமிப்பு முகாமை சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.இந்த நிகழ்ச்சியில் கழகச் சுற்றுச்சூழல் அணியின் மாநில துணைச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான முனைவர் ஆர்.பி.செந்தில்குமார் ,சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு பற்றி உரையாற்றினார். நிகழ்ச்சியில் வரத.ராஜசேகர் , ஏ.ஏ.ஆறுமுகம், மாதேஸ்வரன், சக்கரவர்த்தி, செல்வம், பாபு மற்றும் வெங்கடேசன், அ.சீனிவாசன், திருநாவுக்கரசு, ரமேஷ், தனசேகரன், வீரேந்திர துரை, கோபி, பிரசாந்த், சிற்றரசு தம்மம்பட்டி ரஞ்சித் கணேசன், தம்மம்பட்டி சுரேஷ்குமார், தம்மம்பட்டி சையத் சாவலி, அயோத்தியாபட்டணம் ஹரிஷ்குமார், தும்பல் ஜெகதீசன், சேஷன் சாவடி கார்த்திக், சிங்கிபுரம் ஜோதிவேல் சேலம் இனியவன் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# மணிப்பூரின் மெழுகுதிரிகள்!

அவமானகரமான கூச்சத்தாலும்
பதை பதைக்கின்ற அச்சத்தாலும்
உடம்பு முழுதும்
ஊசி குத்துவது போல் நரக வேதனை!,

மானத்தை மறைக்க
மிருகங்களின் வேட்டையில் இருந்து
தப்பித்து
இந்த பூமி பிளந்து அதை ஆடையாக
அணிந்து
அப்படியே புதைந்திட மாட்டோமோ
என கதறி பதறி ஓடுகின்ற இரண்டு
மான்கள்!

கைகளிலும் வாய்களிலும்
கோரப்பற்களோடு துரத்தும்
வெறி பிடித்த ஓநாய்கள்!
இது ஏதோ காட்டில் நடந்த நிகழ்வு அல்ல!
நடந்தது நமது நாட்டில்
இடம் பெயர் மணிப்பூர்!

கொத்துக்கொத்தாய்
யூதர்களைக் கொன்ற ஹிட்லர் கூட
ஒட்டுத்துணி இல்லாமல்
பெண்களை ஓடவிட்டதில்லை.

அரைகுறையாய் ஆடை உடுத்திய
ஆதிகாலத்து மனிதன் கூட
இப்படி பெண்களை அம்மணமாக
அட்டூழியம் செய்ததில்லை!

இங்கு நதியும் தெய்வமும் பூமியும் நாடும்
மாதா என வாய்கிழிய கத்துவார்கள்!!

ஆனால் ஆடை ஏதும் இல்லாமல்
அழுது புலம்பி ஐயோ என
மிருக வெறியர் முன்னால் எம்
சகோதரிகள் துடித்ததை பார்த்த போது
பாரத மாதாவை பெண்ணாக
உச்சத்தில் வைத்து பின்பு பெண்களை
பள்ளத்தில் புதைத்த போலிகள்
இவர்கள் என உணர முடிகிறது.

ஏன் எப்படி எங்கிருந்து வந்தது
இந்த காட்டுமிராண்டித்தனம்!

தனது அரசியல் லாபத்திற்காக
அள்ளிவிடும் அடுக்கடுக்கான
வெறுப்பு பேச்சுகளா!

குதறி வீசப்பட்ட பில்கிஸ் பானுக்களின்
குற்றவாளிகளை விடுதலை செய்து
கற்கண்டும்
இனிப்பும் கொடுத்த கொடூரங்களா!
சட்டத்திற்கு எதிரான அட்டூழியங்களுக்கு
சட்ட பாதுகாப்பு கொடுத்த
அரசியல் சதுராட்டமா!

இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்னால்
குஜராத்தில் ஆரம்பித்த அராஜக
தாண்டவ புயல் இன்று மணிப்பூரில்
மையம் கொள்ள வந்ததா!

மனம் பதை பதைக்கிறது!
எங்கே போகிறோம் நாம்!
அரசியல் சுய நலத்துக்காக சட்டத்தின்
ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி விட்டு
மதத்தின் பேரால் மரண ஓலங்களை
அரங்கேற்றி விட்டார்கள்!

மணிப்பூர் நிகழ்வு ஆத்திரத்தால்
உடனடியாக
வந்து முடிந்ததில்லை.
கொஞ்சம் கொஞ்சமாக ஊன்றிய
பிரிவு விஷ வித்து இன்று பெரும் நாசமாய்
உச்சத்தில் உட்கார்ந்து இருக்கிறது.

குறுமதி படைத்த சூதுமதியாளர்களால்
குற்றுயிராய் ஓடிய எங்கள் தமக்கைகளே!

நாகரிகவாதிகள் உங்களுக்காக வடித்த
கண்ணீர் உங்களுக்கு ஆடையாக
மாறியிருக்கிறது!
அம்மணமாய் இருந்தது
உங்களை துரத்திய மிருகங்களே!

ஓடும்போது நீங்கள் கத்தி எழுப்பிய
கதறல் ஒலிகள் மதம் பெயரால் அரசியல்
செய்யும் காட்டு மிராண்டிகளை
அடையாளம் காட்டி இருக்கும்!

எங்களை ஈன்றெடுக்காத அன்னையரே!
நீங்கள் இழந்து துடித்த கற்பு
இனி பல பெண்களை காக்கும்
கேடயமாக
நிற்கப்போகிறது!

தங்களை வருத்தி எமக்கு வெளிச்சம்
தந்த மெழுகுதிரிகளே!
பிளவு அரசியல் எத்தனை கொடுமை என
இந்தியாவுக்கே அடையாளம் காட்டி
இருக்கிறீர்கள்!

அதற்காக நீங்கள் இருக்கும் திசை
நோக்கி
இருகரம் தூக்கி தொழுகிறோம்.
மணிப்பூர் மெழுகுதிரிகளே!

– பொள்ளாச்சி **கி.அ.இராசன் எம்.ஏ.**
நூலாசிரியர் : நீதிக்கட்சி To திராவிடமாடல்

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## என்.எம்.துரைசாமி

### ஆகஸ்ட் 1 (2020)



**தனது இளமைக் காலம் முதல் கழகத்தில் ஈடுபாடு கொண்டு புழல் பகுதியில் கழக வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியவர்.**

**புழல் ஒன்றியச் செயலாளராகவும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட பொருளாளராகவும், அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மூன்று முறை நாரவாரிகுப்பம் பேரூராட்சி மன்றத் தலைவராகவும், மூன்று முறைமாதவரம் நகர்மன்ற உறுப்பினராகவும் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். நெல்,அரிசி வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**